**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

**O.S. No. 174 of 2022**

Deposition of **P.W. 1**

Name of the Witness: திரு.முருகன்

Date **: 06.02.2024**

***குறுக்கு விசாரணை***

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பிரதிவாதிகள் தான் என்னை படிக்க வைத்தார்கள் என்றால் சரியல்ல. எனது அம்மா தான் என்னை படிக்க வைத்தார்கள். எனது மனைவி பெயர் சுமதி. அசல் வழக்கு எண் 125/2011 என்ற வழக்கை எனது மனைவி எனக்காக பாகம் கேட்டு தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு போட்டார் என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் இருந்ததால் எனது மனைவி எனக்காக வழக்கு போட்டார் என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் சென்று வெளி செய்த போது அங்கு திருட்டு வேலையில் ஈடுபட்டதால் அங்கிருந்து ஓடி வந்து விட்டேன் என்றால் சரியல்ல. என் மனைவி போட்டுள்ள வழக்கு சொத்தும் இந்த வழக்கு சொத்தும் ஒன்றே தான் என்றால் சரிதான். 01.04.20/16 அன்று ஓஎஸ் 125/11 என்ற வழக்கு என் மனைவி போட்ட வழக்கு வழக்கிற்கு ஆஜராகாததால் தள்ளுபடியாகி விட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண் 125/2011 வழக்கின் பிராது நகலில் உள்ளது எனது மனைவியின் கையெழுத்து கிடையாது. என்னிடம் காட்டப்படும்

அசல் வழக்கு எண் 125/2011ல் உள்ள பிரதிவாதி தனபால் தாக்கல் செய்த பதில்உரை பற்றி எனக்கு தெரியாது.

2) தாவா சொத்துக்கள் என் அண்ணன் 1ம் பிரதிவாதி சின்னராமன் என்பவரிடம் விலைக்கு வாங்கி அது அவருடைய தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அதை நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து வாங்கினோம். என்னுடன் பிறந்தவர்கள் மாது, மணி, தனபால், முருகன், ராஜா. மாது, மணிக்கு பொது குடும்பத்திலிருந்து சொத்தை பிரித்து பாகம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். எனக்கு சிறு வயதாக இருக்கும் போதே மாது, மணிக்கு பாகம் பிரித்து எனது அம்மா கொடுத்து விட்டார். ராஜாவிற்கும் 20 வருடத்திற்கு முன்பே பாகம் பிரித்து கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். அது போல் பாகம் பிரித்து கொடுக்கப்பட்ட சொத்துக்களுக்கு அவர் அவர்கள் பெயரில் பட்டா, சிட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்கனவே தனி தனியாக பாகம் ஏற்பட்டு அவர் அவர்கள் தனி தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால்சரியல்ல. பாகமே ஏற்படவில்லை. 20 வருடத்திற்கு முன்பே பாகம் ஏற்பட்டு விட்டதால் நானும், 1ம் பிரதிவாதியும் தனி தனியாக அனுபவித்து வருகிறோம் என்றாலும், வருவாய் துறை ஆவணங்களும் அவர் அவர்கள் பெயரில் தனித் தனியாக உள்ளது என்றர்ல் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் 20 வருடத்திற்கு முன்பாக பாக பிரிவினை ஏற்பட்டு விட்டது என்றும், பாகபிரிவினை பத்திரம்

தான் ஏற்படவில்லை என்று சொல்லிவிட்டு தற்போது பாகமே ஏற்படவில்லை என்று மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) நான் என்னுடைய தாவாவில் 20 வருடத்திற்கு முன்பாக பாகம் ஏற்பட்டு விட்டதாக ஒப்பு கொண்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 20 வருடத்திற்கு முன்பாக பாக பிரிவினை ஏற்பட்டு விட்டதால் என் பெயரிலும், என் அண்ணன் பெயரிலும் தனி தனியாக வருவாய் துறை ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பாகபிரிவினைக்கு எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்தை வைத்து 6 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ட என்னுடைய பாட்டன், பாட்டி கொடுத்த 1/2 ஏக்கர் நிலத்தை விற்று வேறு 1/2 ஏக்கர் நிலம் மட்டும் தான் வாங்கினேன். அந்த 1/2 ஏக்கர் நிலம் எனது அம்மா எனக்கு பாகபிரிவினை மூலமாக கொடுத்தது. எனக்கு பாகமாக வந்த சொத்தை விற்ற கிரைய பத்திரத்தில் எனக்கு அந்த சொத்து பாகமாக வந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கும் 1ம் வாதிக்கும் சம பாதியாக பாகபிரிவினை பிரிக்கப்பட்டு விட்டது என்றாலும், கிணறு என் பாகத்தில் உள்ளதால் அதில் தண்ணீர் இறைப்பதில் பிரச்சனை என்றால் சரியல்ல. பாகபிரிவினை ஏற்படவில்லை. இன்னும் கூட்டாக தான் உள்ளது. 2ம் பிரதிவாதி மூக்கனூர் ஆதிமூலசாமி கோவில் நிலத்தில் அருகே உள்ள நிலத்தை ஒதுக்கப்பட்டு விட்டது என்றாலும், எனக்கும்

1ம் பிரதிவாதிக்கும் தான் தாவா சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

4) 1ம் பிரதிவாதிக்கு 20 வருடத்திற்கு மேலாக பாகம் ஒதுக்கப்பட்டு அனுபவித்து வரும் சொத்தில் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வீடு எல்லோரும் சேர்ந்து பொது பணத்தில் தான் கட்டப்பட்டது. வீடு 1ம் பிரதிவாதியால் பிரதமர் வீடு கட்டும் திடடத்தின் கீழ் வீடு கட்டி 1ம் பிரதிவாதியால் மட்டும் தான் வீடு கட்டப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வீட்டிற்கான வீட்டு ரசீதுகள் 1ம் பிரதிவாதியின் மனைவி பச்சியம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. அந்த வீட்டை பெரிய அளவில் கட்டப்பட்டதால் நான் பொறாமை கொண்டு அதை அபகரிக்க தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனக்கு எதிராக மதிகோண்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் விசாரணையின் போது வீட்டில் தலையிட மாட்டேன் என்று எழுதி கொடுத்தேன்என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுமாறு சொள்னார்கள். நான் வழக்கு போட்டு விட்டேன். நான் காவல் நிலையத்தில் தகராறு செய்ய மாட்டேன் என்று முச்சலிக்கா எழுதி கொடுத்து விட்டு தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக காவல் நிலையம் சென்று 22 மாதங்களாகிறது. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 2002ல் தான் தகராறு ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன்

என்றும், நான் சொல்வது போல் 20 மாதங்களுக்கு முன்பு தகராறு ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து 22 மாதங்களாகிறது. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலேயே 20 வருடத்திற்கு முன்பாக பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லியிருப்பதால் 20 வருடத்திற்கு முன்பாகவே பாகம் ஏற்பட்டு விட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகம் ஏற்பட்டு விட்டதால் திரும்பவும் பாகம் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், எனது வழக்குதள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.